සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civic Education I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

## குடியியற் கல்வி I

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** பாராளுமன்ற அரசாங்க முறையின் பிரதான பகுதிகள் மூன்று வரிசையொழுங்கில்,
(1) நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை, நீதித்துறை
(2) சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை
(3) நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை
(4) நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, சட்டத்துறை

**2.** இலங்கை அரசியலமைப்பிற்கிணங்க தேர்தல் தொகுதிகள் பிரித்தொதுக்கப்படுவது,
(1) எல்லை நிர்ணய ஆணைக்குழுவினாலாகும்.
(2) தேர்தல்கள் ஆணைக்குழுவினாலாகும்.
(3) அரச சேவை ஆணைக்குழுவினாலாகும்.
(4) பாராளுமன்றத் தெரிவுக்குழுவினாலாகும்.

**3.** எந்தவொரு வேறுபாடுமின்றி உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு இடமளித்தல் பின்வரும் எப்பெயரால் அழைக்கப்படும்?
(1) சமத்துவம் (2) நீதி (3) சட்டம் (4) ஒழுக்கம்

**4.** பல்கட்சி முறையைக் கொண்ட நாடுகள் இரண்டைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) பெரிய பிரித்தானியா, மலேசியா
(2) இலங்கை, இந்தியா
(3) ஜேர்மனி, பிரான்சு
(4) ஐக்கிய அமெரிக்க குடியரசு, கனடா

**5.** பாராளுமன்ற அரசாங்க முறையில் நிறைவேற்றுத்துறையாக விளங்குவது,
(1) ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவை
(2) சபாநாயகர் உள்ளிட்ட ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள்
(3) பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை
(4) ஜனாதிபதியும் பிரதமரும்

**6.** அரசின் விருப்பையும் மக்களின் எதிர்பார்ப்பையும் நடைமுறைப்படுத்தும் பிரதிநிதியாகக் கருதப்படுபவர்/கருதப்படுவது
(1) ஜனாதிபதி (2) பிரதமர் (3) சபாநாயகர் (4) அரசாங்கம்

**7.** ஐரோப்பாவில் ஆரம்பத்தில் தோன்றிய தேசிய அரசுகள் இரண்டைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) இங்கிலாந்து, ஜேர்மனி
(2) ஸ்பெயின், இத்தாலி
(3) ஒல்லாந்து, போத்துக்கல்
(4) இங்கிலாந்து, பிரான்ஸ்

**8.** ஐக்கிய அமெரிக்க குடியரசில் சமஷ்டியாட்சி அரசியலமைப்புக்கிணங்க மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் இரண்டுமாவன,
(1) கல்வியும் சுகாதாரமும்
(2) வரிவிதிப்பும் வெளிநாட்டு வர்த்தகமும்
(3) வீடமைப்பும் நிர்மாணமும்
(4) உள்ளூராட்சியும் பெருந்தெருக்களும்

**9.** ஊழியச் செறிவான தொழினுட்பப் பயன்பாடு என்பதனாற் கருதப்படுவது,
(1) பொருள் உற்பத்தியில் இயந்திர உழைப்பை அதிகளவில் பயன்படுத்துதல்
(2) பொருட்களை விநியோகிக்கும் போது மனித உழைப்பை அதிகளவில் பயன்படுத்துதல்
(3) பொருள் உற்பத்தியில் மனித உழைப்பை அதிகளவில் பயன்படுத்துதல்
(4) பொருட்களை விளம்பரப்படுத்துவதற்குப் பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்துதல்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**10.** நுகர்வுப் பொருள், இடைநிலைப் பொருள் ஆகியவற்றை வரிசையொழுங்கில் தரும் விடையைத் தெரிவுசெய்க.
(1) உணவும் மருந்தும் (2) இயந்திரங்களும் தளபாடங்களும்
(3) ஆடையணிகளும் பசளையும் (4) கட்டடங்களும் சீமெந்தும்

**11.** நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் முயற்சியாண்மை போன்ற உற்பத்திக் காரணிகளுக்கான கட்டணம் வரிசையொழுங்கில்
(1) சம்பளம், வட்டி, வாடகை, இலாபம் (2) இலாபம், வாடகை, வட்டி, சம்பளம்
(3) வாடகை, சம்பளம், வட்டி, இலாபம் (4) இலாபம், வாடகை, சம்பளம், வட்டி

**12.** நட்டமடையும் அரச முயற்சியாண்மைகளைத் தனியார் மயமாக்குதலை அடிப்படை அம்சமாகக் கொண்டது
(1) முதலாளித்துவப் பொருளாதார முறை (2) சமவுடைமைப் பொருளாதார முறை
(3) கலப்புப் பொருளாதார முறை (4) நிலைமாறும் பொருளாதார முறை

**13.** பல் (பன்மை) பண்பாட்டுச் சமூகமொன்றின் சிறந்த செயற்பாட்டிற்குப் **பாதகமாக** அமையும் பண்பு
(1) ஏனையோரின் பண்பாட்டை மதித்தல்
(2) அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஏனையோரின் பண்பாட்டை விட தமது பண்பாடு உயர்ந்தது எனக் கருதிச் செயற்படல்
(3) இன, மத பேதமின்றிச் செயற்படல்
(4) ஏனைய இனத்தவரின் மொழி பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல்

**14.** மாகாண சபை முறையின் கீழ் மத்திய அரசிற்கும் மாகாண சபைகளுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்தும் பிரதிநிதியாக விளங்குபவர்
(1) மாகாண ஆளுநர் (2) முதலமைச்சர்
(3) மாகாணப் பிரதம செயலாளர் (4) மாகாண சபைத் தலைவர்

**15.** தனியார் சொத்துடைமை மற்றும் இலாப நோக்கை அடிப்படையாகக் கொண்டு தொழிற்படும் பொருளாதார முறைமை
(1) சந்தைப் பொருளாதாரம் (2) கலப்புப் பொருளாதாரம்
(3) சமவுடைமைப் பொருளாதாரம் (4) முதலாளித்துவப் பொருளாதாரம்

**16.** உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய பொதுப் பயன்பாட்டுச் சேவைகளின் கீழ் ஆற்றப்படும் பணி
(1) பொது மலசலகூட நிர்மாணமும் புனரமைப்பும்
(2) பொதுப் பாதைகளை நிர்மாணித்தலும் பேணுதலும்
(3) பொதுச் சந்தைகளை நடாத்துதல்
(4) கழிவுநீர் வடிகால்களை முறையாகப் பராமரித்தல்

**17.** கருத்துச் சுதந்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் உரித்தாகும் மனித உரிமைத் தொகுதியானது
(1) பொருளாதார மற்றும் குடியியல் உரிமைகள்
(2) மனித மற்றும் பண்பாட்டு உரிமைகள்
(3) அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள்
(4) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள்

**18.** சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் அடிப்படையாக அமைவது பின்வருவனவற்றுள் எது ?
(1) பிள்ளையின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்
(2) பிள்ளைக்கு அதிகபட்ச நன்மையை வழங்குதல்
(3) பிள்ளையின் கல்வியை உறுதிப்படுத்துதல்
(4) பிள்ளையின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்

**19.** கடமைகள் இரண்டு வகைப்படும். அதிலொன்று தார்மீகக் கடமையாகும். மற்றையது
(1) சமயக் கடமை (2) சமூகக் கடமை
(3) சட்டரீதியான கடமை (4) பிரசைக்குரிய கடமை

**20.** இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது,
(1) 1931ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சீர்த்திருத்தத்தின் மூலமாகும்.
(2) 1947ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சீர்த்திருத்தத்தின் மூலமாகும்.
(3) 1972ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சீர்த்திருத்தத்தின் மூலமாகும்.
(4) 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சீர்த்திருத்தத்தின் மூலமாகும்.

**21.** மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்களை மாகாண மட்டத்தில் பரவலாக்கும் நோக்கில் நிறுவப்பட்ட நீதிமன்றமானது
(1) மஜிஸ்திரேட் நீதிமன்றம் (2) மாவட்ட நீதிமன்றம்
(3) மேல் நீதிமன்றம் (4) மாகாண மேல் நீதிமன்றம்

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

22. ஒரு நாடு சட்டத்தின் மேன்மைக்கு உட்பட்டு ஆட்சி செய்யப்படுவதனை,
(1) சட்டத்தின் ஆட்சி என்பர். (2) நீதித்துறைச் சுதந்திரம் என்பர்.
(3) தன்னாட்சி என்பர். (4) ஜனநாயகம் என்பர்.

23. இலங்கையின் வருடாந்த வரவுசெலவுத் திட்டம் கட்டுப்படுத்தப்படுவது
(1) நிதியமைச்சரால் (2) சட்டத்துறையினால்
(3) இலங்கை மத்திய வங்கியால் (4) ஜனாதிபதியால்

24. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தத்துடன் இணைந்த முதலாவது விருப்பிலான பின்னேட்டுக்கமைய,
(1) குற்றவாளிக்கு மரணதண்டனைக்குப் பதிலாக வேறு மாற்றுவழித் தண்டனைகளைக் கோர முடியும்.
(2) கடந்தகால நிகழ்ச்சிகளுக்குப் பொருந்தக்கூடிய வகையில் விதிக்கப்படும் தண்டனையிலிருந்து விடுபட முடியும்.
(3) பிள்ளையைக் கடத்திச் செல்லல் மற்றும் சிறைப்பிடித்தல் போன்றவற்றுக்கான தண்டனையை விதிக்க முடியும்.
(4) நீதியை நிலைநாட்டுவதில் தமது நாடு தொடர்பில் திருப்தியடைய முடியவில்லையெனில், ஒரு பிரசை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக மனித உரிமைக் குழுவிடம் முறையிட முடியும்.

25. மோதல் ஒன்றைத் தீர்க்கும் போது 'வெற்றி - வெற்றி தீர்வை' பெறுவதற்குப் பயன்படுத்தக் கூடிய இலகுவான முறை
(1) கலந்துரையாடல் முறை (2) வேண்டுகோள் விடுத்தல்
(3) ஆலோசனைகளை முன்வைத்தல் (4) மத்தியஸ்தம் வகித்தல்

26. பிரசையொருவரால் நிறைவேற்றப்பட வேண்டிய சட்டக் கடமைகள் இரண்டாவன,
(1) அரசியலமைப்பைப் பாதுகாத்தலும் சூழலைப் பேணுதலும்
(2) தீவிரவாதத்தை நிராகரிக்கச் செயற்படலும் தேசிய மரபுரிமைகளையும் சொத்துக்களையும் பாதுகாத்தலும்
(3) அரசினால் விதிக்கப்படும் வரிகளைச் செலுத்துதலும் பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தலும்
(4) சமயக் குருமார்களை மதித்தலும் முதியோரைப் பேணுதலும்

27. உலக மயமாக்கலினால் இலங்கை எதிர்நோக்கியுள்ள **தீய** விளைவு,
(1) வினைத்திறனற்ற கைத்தொழில்கள் சந்தையிலிருந்து நீங்குதல்
(2) மூளைசாலிகளின் துரிதமான வெளியேற்றம்
(3) பல்வேறு வலய ஒழுங்கமைப்புகளில் இணைந்துகொள்ள முடிந்தமை
(4) வெளிநாட்டு முதலீடுகளும் தொழினுட்பமும் உள்வருதல்

28. தொழிற்றுறையில் தொழில்வழங்குநருக்கும் தொழில்புரிவோருக்குமிடையே பிணக்குகள் ஏற்படும்போது ஜனநாயக ரீதியான முறையில் அவற்றுக்குத் தீர்வுகாண பெரும்பாலும் பயன்படுத்தப்படும் முறையானது
(1) கலந்துரையாடல் முறை (2) இணக்கப்படுத்தல்
(3) மத்தியஸ்தம் வகித்தல் (4) வேண்டுகோள் விடுத்தல்

29. மாகாண நீதிமன்றத்திற்குரிய அதிகாரங்கள் இரண்டைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
A - வர்த்தகப் பிணக்குகளைத் தீர்த்தல்
B - அரசுக்கெதிரான சூழ்ச்சி பற்றிய வழக்குகளைத் தீர்த்தல்
C - தொழில் நியாயமன்றத் தீர்மானங்கள் பற்றிய வழக்குகளைத் தீர்த்தல்
D - பாராளுமன்றத் தேர்தல் ஆட்சேபனை விண்ணப்பங்களை விசாரித்தல்
E - பெண்கள் மீதான வன்புணர்வு பற்றிய வழக்குகளை விசாரித்தல்
(1) A, B (2) A, C (3) B, E (4) C, D

30. நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவராகப் பதவி வகிப்பவர்,
(1) பிரதம நீதியரசர் (2) சொலிசிட்டர் ஜெனரல்
(3) சட்டமா அதிபர் (4) நீதியமைச்சின் செயலாளர்

31. பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்களில் எந்தச் சீர்த்திருத்தத்தின் மூலம் இலங்கையருக்கு முதற் தடவையாக அரசியலில் அதிகளவில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்தது ?
(1) 1833 கோல்புறூக் - கமரன் (2) 1910 குறு - மக்கலம்
(3) 1921 மெனிங் (4) 1931 டொனமூர்

32. பின்வரும் கூற்றுகளில் கவனம் செலுத்துக.
- இலங்கையின் அரசியலமைப்பில் முதற் தடவையாக அடிப்படை உரிமைகள் பற்றியதோர் அத்தியாயம் சேர்க்கப்படல்
- இலங்கையின் இறுதியானதும் உயர்ந்ததுமான நீதிமன்றமாக உயர் நீதிமன்றத்தை ஏற்றுக்கொள்ளல்
- அரசியலமைப்பு நீதிமன்றமொன்றை நிறுவுதல்

மேற்படி மாற்றங்கள் பின்வரும் எந்த அரசியலமைப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்டன ?
(1) 1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பு
(2) 1947ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பு
(3) 1972ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பு
(4) 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

33148

**33.** "ஒருவர் கைத்தடியை அசைத்துக்கொண்டு வீதியில் செல்ல முடியுமாயினும் அச்சுதந்திரம் அடுத்தவரின் மூக்கு நுனியில் முடிவடைகிறது." - ஹரோல்ட் ஜே. லஸ்கி
மனித உரிமைகள் பற்றிய மேற்படி கூற்றிலிருந்து விளங்கிக் கொள்ளக்கூடியது யாதெனில்,
(1) மனித உரிமைகளை அனுபவிக்கும் போது வலது குறைந்தோருக்கு ஏனையோர் உதவுதல் வேண்டும்.
(2) பிறிதொருவரின் உரிமைகள் மீறப்படும் வகையில் உரிமைகளை அனுபவிப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை.
(3) தனது கைத்தடியை அசைத்துக்கொண்டு வீதியில் செல்லும் உரிமை எந்தவொரு நபருக்கும் உண்டு.
(4) மனித உரிமைகளை அனுபவிப்பதில் நபரொருவருக்குக் கட்டுப்பாடுகளை விதிக்க முடியாது.

**34.** மனித அபிவிருத்திச் சுட்டிக்குரிய நியதிகளாவன,
(1) ஆயுள் எதிர்பார்க்கை, எழுத்தறிவு மற்றும் கொள்வனவு ஆற்றலின் அடிப்படையில் கணிக்கப்பட்ட தனிநபர் மொத்த தேசிய உற்பத்தி
(2) ஆயுள் எதிர்பார்க்கை, தாய் மரண வீதம் மற்றும் எழுத்தறிவு
(3) சிசு மரண வீதம், எழுத்தறிவு மற்றும் ஆயுள் எதிர்பார்க்கை
(4) ஆயுள் எதிர்பார்க்கை, இறப்பு வீதம் மற்றும் கொள்வனவு ஆற்றலின் அடிப்படையில் கணிக்கப்பட்ட தனிநபர் மொத்த தேசிய உற்பத்தி

**35.** வங்காள விரிகுடாக் கடற்கரைக்குட்பட்ட நாடுகள் இணைந்து கைத்தொழில் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்காகத் தாபித்துள்ள 'பிம்ஸ்டெக்' (BIMSTEC) அமைப்பிற்குரிய நாடுகள் இரண்டாவன,
(1) இலங்கை, சிங்கப்பூர் (2) பங்களாதேஷ், இந்தோனேசியா
(3) இந்தியா, மாலைதீவு (4) மியன்மார், தாய்லாந்து

**36.** அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளில் அவதானிக்கக்கூடிய அம்சங்கள் சில அபிவிருத்தியடைந்துவரும் இலங்கையிலும் காணப்படுகின்றன. இலங்கையில் அவதானிக்கக்கூடிய அவ்வாறான பண்புகள் இரண்டைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) உயர்ந்த மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணும் குறைந்த குடித்தொகை விருத்தியும்
(2) அதிக நகர குடித்தொகையும் குறைந்த சிசு மரண வீதமும்
(3) உயர்ந்த ஆயுள் எதிர்பார்க்கையும் உயர்ந்த எழுத்தறிவும்
(4) உயர்ந்த கல்விச் செலவும் குறைந்த தாய் மரண வீதமும்

**37.** தென் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் சமூகப் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு 1950ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒன்றிணைந்த திட்டமானது பின்வரும் எப்பெயரால் அழைக்கப்படுகிறது ?
(1) ஆசியான் அபிவிருத்தி (2) கொழும்புத் திட்டம்
(3) பொதுநலவாயம் (4) சார்க் அமையம்

**38.** கிராமிய மக்களின் போசணை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் விவசாயத்துறையில் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் பாடுபடல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனமானது,
(1) உணவு விவசாயத் தாபனம் (F.A.O.) (2) உலக உணவுத் திட்டம் (W.F.P.)
(3) உலக சுகாதாரத் தாபனம் (W.H.O.) (4) உலக வங்கி

**39.** பேண்தகு (நிலையான) அபிவிருத்தியை அடையும்பொருட்டு நிறைவேற்ற வேண்டிய சமூகத் தேவைகள் இரண்டைக் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.
A - அதிகபட்ச இலாபநோக்கைக் கொண்ட உற்பத்தி மனப்பாங்கைக் கட்டுப்படுத்தல்
B - சந்தை விரிவடைவதால் ஏற்படும் போட்டியைக் கட்டுப்படுத்தல்
C - மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல்
D - சூழல் நேயமான வள நுகர்வு
E - நீதியை நிலைநாட்டுதல்

(1) A, B (2) B, C (3) C, E (4) D, E

**40.** ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நிருவாகப் பிரிவு,
(1) பொதுச் சபை ஆகும். (2) சர்வதேச நீதிமன்றம் ஆகும்.
(3) நம்பிக்கைப் பொறுப்புச் சபை ஆகும். (4) செயலகம் ஆகும்.

* *

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 T I,II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civic Education I, II

## குடியியற் கல்வி II

* **முதலாம்** வினா கட்டாயமானதாகும்.
* **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** (i) 'எதென்ஸ்' நகர அரசில் பிரதான ஆட்சி நிறுவனமாக விளங்கிய மக்கள் மன்றத்தின் செயற்பாடுகளில் பங்குபற்ற **அனுமதிக்கப்படாத** நபர்களில் **இரண்டு** பிரிவினரைப் பெயரிடுக.

(ii) சட்டத்தின் ஆட்சிக்குட்பட்ட சமூகத்தில் காணக்கூடிய **இரண்டு** பண்புகளை எழுதுக.

(iii) சுவிட்சர்லாந்தின் சமஷ்டியாட்சியில் அவதானிக்கக்கூடிய சிறப்பியல்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iv) நாடொன்றின் பிராந்திய அலகுகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(v) தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கை அரசு நிறைவேற்றியுள்ள சட்டங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(vi) மனித நடவடிக்கைகளினால் தற்போது உலகம் எதிர்நோக்கியுள்ள சூழற் பிரச்சினைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(vii) வளங்களின் விளைதிறனை முன்னேற்றுவதற்கு உலகில் பயன்படுத்தப்படும் **இரண்டு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(viii) மோதல் தீர்விற்காகப் பயன்படுத்தப்படும் கலந்துரையாடல் முறையின் அடிப்படைப் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ix) நாடொன்றின் சமூக நீதி சீர்குலைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **இரண்டை** எழுதுக.

(x) உயர்ஸ்தானிகர்கள் மற்றும் அரச தூதுவர்களிடம் காணப்பட வேண்டிய குணவியல்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** (i) இலங்கையில் தேர்தலொன்றின் போது அல்லது மக்கள் தீர்ப்பின் போது வாக்காளராவதற்கு நபரொருவர் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஜனநாயக ஆட்சி முறை நிலவும் நாடொன்றில் அரசியலமைப்பிற்கிணங்க செயற்படுவதனால் ஏற்படும் பயன்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) "ஜனநாயக ஆட்சியொன்று வெற்றிபெறுவதற்கு வாக்காளர் கொண்டுள்ள பொறுப்பு மிகவும் முக்கியமானதாகும்." **மூன்று** காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இதனை விளக்குக. (05 புள்ளிகள்)

**3.** (i) இலங்கையின் மாவட்ட நீதிமன்றில் விசாரிக்கக்கூடிய **இரண்டு** வகையான வழக்குகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) சட்டமா அதிபரின் பணிகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையில் நீதித்துறைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவற்றின் முக்கியத்துவத்தை விவரிக்குக. (05 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

4. (i) சர்வதேச உறவுகள் விருத்தியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) நாடொன்று சர்வதேச உறவுகளைப் பேணுவதன் மூலம் அடைய எதிர்பார்க்கும் நோக்கங்கள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) சர்வதேச உறவுகள் இலங்கை மீது செலுத்தும் செல்வாக்கு பற்றி **மூன்று** விடயங்களின் துணையுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

5. (i) மனிதனது வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) எந்தவொரு பொருளாதார முறையும் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) சந்தைப் பொருளாதார முறையில் அவதானிக்கக்கூடிய வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(b) இலங்கையில் அவதானிக்கக்கூடிய சந்தைப் பொருளாதார முறையின் பண்புகள் **மூன்றைச்** சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

6. (i) இலங்கையில் நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களில் **இரண்டைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) உள்ளூராட்சி நிறுவனங்களின் பயன்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையில் மத்திய அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு பிரசையொருவர் ஆற்ற வேண்டிய கடமைகள் **மூன்றை** விவரிக்குக. (05 புள்ளிகள்)

7. (i) சூழல் பிரச்சினைகள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் இயற்கை நிகழ்வுகள் **இரண்டைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் கழிவுகளை முகாமை செய்வதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் **மூன்றைக்** குறிப்பிடுக (03 புள்ளிகள்)

(iii) (a) இலங்கையில் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் அண்மையில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(b) இலங்கையில் கழிவுகள் தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பிரசைகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டிய விதம் பற்றி **மூன்று** விடயங்களின் மூலம் விவரிக்குக. (05 புள்ளிகள்)

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka